தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993, ஏப்ரல் 7, புதன்கிழமை.

பங்குனி 25, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு-2024.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு''.

மிகுந்த பொருள் வளம் உடையதாகவும், பிற நாட்டவர்களாலும்கூட விரும்பத்தக்கதாகவும், எந்தவிதமான கேடும் இல்லாததாகவும், மிகுந்த விளைச்சல் உடையதாகவும் அமைந்து இருப்பதே சிறந்த நாடாகும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 261, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

261—

பத்திரம் எழுதுபவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சித் திட்டம்.

*14130—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரம் எழுதுபவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அப்படி ஒரு நடைமுறைத் திட்டம் இல்லை.

[1993 ஏப்ரல் 7

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரம் எழுதுபவர்கள் சரியாக எழுதினால் வழக்குகள் குறைவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். எனவே, பத்திரம் எழுதுபவர்களுக்கும் குறுகியகால பயிற்சியாக 3 மாத கால பயிற்சி அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் பத்திரத்தை யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்று இருந்தது. 1982 ஆம் ஆண்டு அம்மாதிரி எழுதுவதால் பல தவறுகள் நடப்பதை எண்ணி அது ஒழுங்குப்படுத்தப்பட்டது. அப்படி ஒழுங்கு படுத்துகின்றபோது அதுவரையிலும் எழுதிக் கொண்டிருப்பவர்களுக்கு தீங்கு நேராமலும் மக்களுடைய நலன் கருதியும் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்களுக்கு மட்டும் பத்திரம் எழுதுவதற்கு அப்போது வழிவகை செய்யப்பட்டது. அதற்குப் பிறகு பத்திரம் எழுதுவதற்கு தேர்வு வைக்கப்பட்டு அந்தத் தேர்வு மூலமாக அனுமதிக்கப்படுகிறது. அப்படித் தேர்வு வைக்கிறபோது பதிவுச் சட்டம், முத்திரைச் சட்டம், நில உச்சவரம்புச் சட்டம் போன்ற சட்டக் கேள்விகளைக் கேட்கிறோம். ஆகவே, தேர்வில் தேறியவர்களுக்கு மட்டுமே இப்போது பத்திரம் எழுதுகிற அனுமதியை வழங்குகிறோம். அப்படி தேர்வு எழுதாமல் யாரையாவது அனுமதிக்க வேண்டுமென்றால் அதற்கு முதலிலேயே சட்டம் இருக்கிறது, வழக்கறிஞர்கள் எழுதலாம் என்று. அதுமட்டுமல்ல. சார்ட்டட் அக்கவுன்டன்ட்ஸ் பட்டயக் கணக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனுமதி பெற்று எழுதலாம். இதுதான் இன்றைக்கு இருக்கிற முறை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் சொத்துக்களைப் பதிவு செய்கின்றவர்களில் படிக்காதவர்கள் அதிக அளவு இருக்கிறார்கள். இந்த அறியாமையைப் பயன்படுத்தி பத்திரம் எழுதுகிறவர்கள் தவறுதலாக பத்திரத்தை எழுதிவிடுகிறார்கள். எனவே, சொத்துக்குச் சொந்தக்காரர்கள் அடிக்கடி வழக்குகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி தவறுதலாக எழுதுகின்றவர்கள் மீது ஏதேனும் நீதிமன்றங்கள் மூலமாக வழக்கு தொடர்ந்து அவர்களைத் தண்டிக்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக கிராமங்களிலே பத்திரம் எழுதுகின்றபோது, யார் விற்கிறார்கள், யார் வாங்குகிறார்கள், விற்கிறவர்களுடைய மூலப்பத்திரம் என்ன என்று பார்க்கிறோம். அதற்குப் பிறகு மூலப்பத்திரத்தில் உள்ள நிலத்தின் நான்கு எல்லைகள், 4 பக்கத்தினுடைய எல்லைகள், அதாவது இன்னார் நிலத்திற்கு மேற்கு, இன்னார் நிலத்திற்கு கிழக்கு, வாய்க்காலுக்கு வடக்கு என்று ஏதோ எல்லையைப்

போட்டு, சர்வே எண் போட்டு, விஸ்தீரணம் எல்லாம் போட்டு எழுதுகிறோம். அதைப் பதிவு செய்கிறபோதுகூட, பதிவாளர் மூலப்பத்திரத்தைப் பார்த்துதான் பதிவு செய்கிறார்கள். இப்படி எங்காவது தவறு நடந்தால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட தவறு இல்லாமல் இருப்பதற்காகத்தான் இன்றைக்கு நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்து இந்த அரசு நிறைவேற்றி, அதற்குப் பிறகு, பட்டா பாஸ் புத்தகத்தையும் இன்றைக்குக் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறோம். இது வந்துவிட்டால், இப்படி நீதிமன்றத்திற்குப் போகிற வழக்குகளும் குறையும், தவறுகளும் குறையும் என்று கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா,

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரம் எழுதுபவர்களுக்கு முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் போன்ற சட்ட நுணுக்கங்கள் தெரிந்தாலும், அதிலே குறிப்பாக தெரியவேண்டியது 'பிராப்பர்ட்டி ரைட்' ஆகும். இது ஒரு பெரிய சட்டமாகும். குறிப்பாக, கிப்ட் அல்லது செட்டில்மெண்ட் போன்றவைகளுக்கு எல்லாம் மிக நுணுக்கமான வித்தியாசம் இருக்கிறது. அதைத் தெரியாமல் எழுதுகிற காரணத்தினால்தான், ஒரு குறிப்பிட்ட ஆவணம் கிப்டைச் சார்ந்ததா, அல்லது செட்டில்மெண்டைச் சார்ந்ததா என்பதற்காக, உச்சநீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றம் போன்ற பெரிய நீதிமன்றங்களுடைய நேரம் எல்லாம் வீணாகிறது. வழக்குகள் அங்கே தேங்குகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட பத்திரங்கள் எழுதுகிறபோது, வழக்கறிஞர்கள் அல்லாதவர்கள் எழுதினால், வழக்கறிஞர்கள் அதை அட்டெஸ்டு செய்யவேண்டும் என்கிற ஒரு முறையைக் கொண்டு வந்தால், இதில் ஓரளவிற்கு பத்திரங்கள் தவறாக பதிவு செய்வதைத் தவிர்க்கலாம். எனவே வழக்கறிஞர்கள் அதை அட்டெஸ்ட் செய்யவேண்டும் என்ற ஒரு முறையை ஏற்படுத்துவது பற்றி அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.05.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர் என்று எனக்குத் தெரியும். அதே போன்ற வழக்கறிஞர்கள் இங்கே இருக்கிறார்கள். டாக்டர்கள் இருந்தால் டாக்டர்களுக்கு சாதகமாகச் சொல்கிறார்கள். வழக்கறிஞர்கள் வழக்கறிஞர்களுக்குச் சாதகமாகச் சொல்கிறார்கள். அதே போல் ப்ராபர்டி என்ன என்பது அந்த எழுத்தர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இது எப்படி சுத்த

கிரயமா, ஒத்தியா, அல்லது லீசா, தானமா போன்ற எல்லா விவரங்களையும் இன்றைக்குச் சாதாரண நிலையிலுள்ளவர்கள் சொல்வார்கள். கிராமத்திலே நாட்டு வக்கீல் என்று சொல்வார்கள். நாட்டு வக்கீல் என்றால், படிக்காமலேயே வழக்கறிஞர்களுக்கு தெரிகிற அளவிற்கு மிக அதிகமாகத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அதனால் இதிலே யாரும் ஏமாற மாட்டார்கள். இதற்கு வேண்டிய எல்லா விவரமும் தெரிந்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள், இதில் நாம் தேர்வு செய்கிறபோது எல்லாவற்றையும் என்னென்ன வேண்டுமோ, அத்தனையும் இந்தக் கேள்வித் தாள்களில் இருக்கும். ஆகவே தேர்வு செய்கிறவர்களுக்கு மட்டுமே நாங்கள் கொடுக்கிறோம். எந்தவிதமான சங்கடமும் இருக்காது. அதுவும் அல்லாமல் இன்னும் அதிகமாக இதை காம்பிளிகேஷன் பண்ணி வக்கீல் கிட்டே போய் கையெழுத்து வாங்கவேண்டுமென்கிற முறை நிச்சயமாகக் கொண்டு வரப்பட மாட்டாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் வேலையா அவர்கள் கேட்கிறபோது பத்திரங்கள் எழுதுவதை வழக்கறிஞர்கள் அட்டஸ்ட் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் அதிலே ஒரு திருத்தத்துடன் அமைச்சர் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்தப் பத்திரம் எழுதுவதில் சட்ட நுணுக்கங்கள் தேவைப்படுகிற காரணத்தினால் அந்தப் பத்திரம் எழுதுகிற உரிமையை சட்டப் படிப்பு படித்தவர்கள் மட்டும்தான் எழுத முடியும் என்கிற ஏற்பாட்டை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாதிருந்த காலத்தில், இன்றைக்கு ஏறக்குறைய 19,000 பேர் எழுத்தர்கள் இருக்கிறார்கள். அதுவும் போதாது என்று இன்றைக்கு இருக்கிற அரசு புரட்சித் தலைவியினுடைய ஆணையின் மீது சென்ற ஆண்டு நாங்கள் தேர்வு வைத்து, அதிலே 5,000 பேர் தேர்விலே தேர்வு பெற்றிருக்கிறார்கள். அதிலே 2,000 பேருக்கு சென்ற ஆண்டு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 2,000 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதனாலே தவறான காரியம் நடப்பதற்கு வழிவகுக்கவேண்டுமென்று இந்த அரசு கருதவில்லை. ஆனால் வழக்கறிஞர்கள் ஒரு துறையிலே எந்த அளவிற்கு அறிவு பெற்றிருக்கிறார்களோ. அதற்குக் குறைவாக இல்லாவிட்டாலும், நான் முதலிலே சொன்னபடி அந்த நாட்டு வக்கீல்கள்

1993 ஏப்ரல் 7]

படித்துவிட்டு வருகிற வக்கீல்களைவிட விவரம் தெரிந்து வந்திருக்கிறார்கள். இங்கேயிருக்கின்ற வக்கீல்கள் தவறாகக் கருதக் கூடாது. இன்னும் சில இடத்திலே புதியதாக வந்தவர்கள்கூட விவரம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் பட்டம் பெற்று விட்டோம், அதனாலே உங்களுக்கு மட்டும்தான் எல்லாம் தெரியும் என்றில்லை. உங்களுக்குத் தெரியும். ஆனால் மற்றவர்களும் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் மற்றவர்களுக்கு இந்த உரிமைகள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. கோபாலகிருஷ்ணன்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதப்பட்ட பத்திரங்கள் பதிவுக்காக உள்ளே சென்று அதன் உரிமையாளர்கள் கையில் திரும்ப வரும்போது அது கிழிந்த நிலையிலும், கசங்கிய நிலையிலும் வருகிறது. அதனால் அந்த ஏழை விவசாயி மிகுந்த மனச் சோர்வுக்கு ஆளாக்கப்படுகிறார். இந்த நிலையை அமைச்சரவர்கள் மாற்றி அமைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரி வருவதற்கு வாய்ப்பு இல்லை. எங்கேயாவது அப்படி இருந்தால் அது வராமல் இருப்பதற்கு அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 262, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

262—

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பொறியியல் கல்லூரி ஏற்படுத்துதல்.

*14608—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அல்லது மற்றொரு நகரத்தில் 1992-93-ல் பொறியியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.